சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | கிருஷ்ணகுமார் |
| தந்தை பெயர் | : | கௌரிசங்கர் |
| கிராமம் | : | பட்டுக்கோட்டை |
| தாலுக்கா | : | பட்டுக்கோட்டை |
| தொழில் | : | முத்துப்பேட்டை வட்டாட்சியர் |
| வயது | : | 55 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது முத்துப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டு கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்தபோது திருவாரூர் காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் 1ம் எதிரி நடராஜன், 2ம் எதிரி கங்காதரன் ஆகியோர்கள் இந்து உடையார் என சாதி சான்றிதழ்கள் வழங்கினேன். அந்த சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.4 மற்றும் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்தபோது விவரம் சொல்லியுள்ளேனா என்றால் என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.16 17:46:40 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.